# இயேசு மானிடனாகப் பிறந்தார்

## 1. கிறிஸ்துமஸ் மற்றும் இயேசுவின் அவதாரம் குறித்த ஆழ்ந்த அர்த்தத்தை அறிந்து கொள்க

ஜெபம்: “அன்பான இயேசுவே, நீர் தேவனும் மனிதனுமாய் இருக்கிறீர் என்ற அற்புதமான உண்மையைப் போற்ற எனக்கு உதவி செய்யும் உம்மில் தேவனும் மனிதனும் கலந்துள்ளதையும் நீர் எங்களுக்குப் பிதா அருளிய மாபெரும் பரிசு என்பதையும் பிறருக்கு எடுத்துரைக்க உதவி செய்யும்.”

**பின்னணி:** நீங்கள் இன்னும் இயேசுவின் பிறப்பைப் பற்றிய வரலாற்றை அறியவில்லை எனில், லூக்கா 1,2, மத்தேயு 1, 2 ஆகியவற்றை வாசிக்கவும். கிறிஸ்துமஸ் பற்றிய சிறுவர்க்கான பாடத்தில் லூக்கா 1, 2 ல் இருந்து ஒரு நாடகம் அடங்கியுள்ளது.



**இயேசு பிறப்பதற்கு** பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஏசாயா முன்னுரைத்தார். இரட்சகர் எவ்வாறு அழைக்கப்படுவார் என்பதை ஏசாயா 7:14 ல் காண்க. பதில்: அவர் “இம்மானுவேல்” என்று அழைக்கப்படுவார். அதற்கு ‘தேவன் நம்மமோடு இருக்கிறார்’ என்று அர்த்தம்.

**இயேசுவுக்கு இரண்டு தன்மைகள் இருந்தன.** தேவனின் தெய்வீகத் தன்மை; மனிதனின் மானிடத் தன்மை. அவர் மனிதனுக்கும், ஒரே அதி பரிசுத்த எல்லாம் வல்ல தேவனுக்கும் இடையில் இருக்கும் பாலம்.

- அவரது இரு தன்மைகளில் எது யோவான் 1:1-3 ல் காணப்படுகிறது?
- யோவான் 1:1 இயேசுவை நித்திய வார்த்தை என்று இனம் காட்டுகிறது. அவர் என்னவாக மாறினார் என்பதை யோவான் 1:7 கூறுகிறது?
- யோவான் 1:1-3 ல், இயேசு மனிதனாகப் பிறப்பதற்கு முன்னரும் இருந்தாரா என்பதைக் காண்க.
- எபி. 2:14, 15 ல் அவரது இரு தன்மைகளில் எது காணப்படுகிறது?

மேலும் எபி. 2:14, 15 ல், நம்முடைய மானிடத் தன்மைகளை பகிர்ந்து கொண்டதன் மூலம் இயேசு நம்மை யாரிடம் இருந்து இரட்சித்தார் என்பதையும் **காண்க.** பதில்: மானிடன் ஆனதால் இயேசு நம்மை பிசாசிடம் இருந்து இரட்சித்தார்.

- மானிடர் ஆனதால் இயேசு நம்மை யாராக மாறச் செய்தார் என்பதை கலா. 4:3-7 ல் காண்க. பதில்: தேவன் மனிதனாகப் பிறந்ததால், நமக்குப் பதிலாக அவர் மரித்து, நம்மை தேவனுடைய பிள்ளைகள் ஆக்கி, அவரோடு நம்மையும் தமது பிதாவின் ஆசீர்வாதங்களுக்கு சுதந்திரவாளிகள் ஆக்கினார்.

## 2. சிறப்பான கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளுக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

- கிறிஸ்துமஸ் காலங்களில் சில விசுவாசிகள் தங்கள் நண்பர்களின் வீடுகள் முன் இயேசுவின் பிறப்பைப் பற்றி பாடல்கள் பாடலாம்.
- மற்றும் சிலர் அருகில் இருக்கும் மிகவும் ஏழை மக்களுக்கு உணவும் பரிசுகளும் கொண்டு கொடுக்கலாம்.
- இயேசுவின் பிறப்பைக் கொண்டாட பிற விசுவாசிகள், நண்பர்கள், உறவினர்களுடன் விருந்து அருந்தி மகிழலாம்.

## 3. ஒரு கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தைத் திட்டமிடுக. அந்தந்தப்பகுதி சம்பிரதாயங்களுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளைத் தேர்வு செய்யவும்.

தாங்கள் தயாரித்த எதையாகிலும் வழங்குமாறு **பிள்ளைகளிடம் கூறவும்.**

**இயேசுவின் பிறப்பைப் பற்றிய தீர்க்கதரிசனம்:** ஒவ்வொரு தீர்க்கதரிசனமாக நீங்கள் குறிப்பிடும்போது, அதை வாசிக்க உதவியாளர்களை ஆயத்தம் செய்க. இயேசு பிறப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அதைப்பற்றி முன்னுரைத்தனர். மனித குலத்தின் இரட்சகர் எவ்வாறு இருப்பார் என்பதைக் கீழ்வருமாறு அவர்கள் முன் குறித்தனர்:

- ஒரு பெண்ணின் வித்து. சர்ப்பத்தின் (சாத்தான்) தலையை அவர் நசுக்குவார், ஆதி. 3:15.
- எல்லா ஜனங்களையும் ஆசீர்வதிக்கும் ஆபிரகாமின் வம்சத்தில் வருகிறவர், ஆதி. 12:1-3; 7.
- யூதா கோத்திரத்தில் இருந்து, ஆதி. 49:10.
- எல்லா ஜனங்களும் செவி கொடுக்கும் மோசேக்கு ஒப்பான ஒரு தீர்க்கதரிசி, உபா. 18:15
- என்றென்றும் ஆட்சி செய்யும், தாவீதின் வம்சத்தில் வருகிறவர், ஏசா. 9:6, 7.
- பெத்லகேமில் பிறப்பவர், மீகா. 5:2
- கன்னிகையின் மகனாகிய இம்மானுவேல், ஏசா. 7:14


இயேசுவை நாம் ஏன் இம்மானுவேல் என்று அழைக்கிறோம், அவருக்கு இரு தன்மைகள் உண்டு, ஆகியவற்றை **விளக்குக.**

**ஞானிகள்** குழந்தை இயேசுவைப் பார்க்க வந்தனர், மத். 2.

- நீங்களோ அல்லது ஒரு உதவியாளரோ மத். 2 ல் உள்ள கதையை வாசியுங்கள் அல்லது பாராமல் கூறுங்கள்.
- இயேசு தேவனால் அனுப்பப்பட்ட விசேஷமான இராஜா என்பதை ஞானிகள் அறிந்து கொண்டனர்.
- கேள்வி: "எந்த மிக மோசமான மனிதர்கள் இயேசு வாழக்கூடாது என்று விரும்பினர்?"
- தேவனை நிராகரித்து, அவரது மக்களை துன்புறுத்த முயன்ற ஏரோது இராஜாவைப் போல இன்று எந்த வழிகளில் எல்லாம் மோசமான மனிதர்கள் செயல்படுகின்றனர்?
- ஆயர்கள் இயேசுவை மாட்டுத் தொழுவத்தில் கிடத்தி இருப்பதைக் கண்டனர். ஞானிகள் அவரை எங்கு கண்டனர்? பதில்: ஒரு வீட்டில்.
- எத்தனை ஞானிகள் என்று வேதாகமம் கூறவில்லை. ஆனால் எத்தனை பரிசுகள் அவர்கள் கொண்டு வந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. எத்தனை?

உடன்படிக்கை பெட்டி பிடிபட்டதைப் பற்றிய **கதையைக் கூறவும்** (1 சாமு. அத். 4-6). முதலில் உடன்படிக்கை பெட்டி என்ன என்பதை விளக்குக.

- இயேசு பிறப்பதற்கு முன்னரேயே, இயேசுவின் இரட்சிப்புப் பணியைப் பற்றிய முக்கிய அம்சங்களை உலகப் பூர்வமான அடையாளங்களின் மூலமாக தேவன் உணர்த்தினார். மனிதனுக்கு தேவ பிரசன்னம் கிடைப்பதோடு சம்பந்தப்பட்டதே உடன்படிக்கை பெட்டி. இந்த குறியீட்டை அகற்றிவிட்டு, இயேசு பிறந்த போது தேவன் நம்மோடு மாம்சமாக இருக்க வந்தார்.
- இஸ்ரவேலோடு செய்து கொண்ட உடன்படிக்கை தேவனால் கற்பலகையில் எழுதப்பட்டது. அது உடன்படிக்கை பெட்டியாகிய பெரிய பெட்டியில் வைக்கப்பட்டு இருந்தது. அந்த பரிசுத்த பெட்டியைப் போலவே, இயேசு தேவ சட்டத்தை தமது இருதயத்தில் சுமந்தார். அவர் எப்போதும் தமது பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிந்தார்.
- அந்தப் பெட்டி மரத்தால் செய்யப்பட்டு பொற் தகட்டால் மூடப்பட்டு இருந்தது. எசேக்கியேல் தேவனின் மகிமை பொருந்திய தரிசனத்தைக் கண்டான். (எசே. 10:4). இது போலவே இயேசுவினிடம் இருந்து வீசிய தேவ மகிமையை யோவானும் அப்போஸ்தலர்களும் கண்டனர்.
- பொன்னால் செய்யப்பட்ட இரு கேருபீன்கள் (மாபெரும் தூதர்கள்) பெட்டியின் மூடியின் இருபுறமும் நின்றன. அவற்றின் சிறகுகள் விரிந்து மூடியை மறைத்தன. எல்லாம் வல்ல தேவ பிரசன்னத்தை வருணிக்கும் போதெல்லாம் வேதாகமம் இத்தகைய கேருபீன்களைக் காட்டுகிறது.



1 சாமுவேல் 1-4 ல் உள்ள **கதையின் முக்கிய பகுதிகளை** மட்டும் கூறவும்.

- பெரிஸ்தருக்கு எதிரான ஒரு போரில் இஸ்ரவேலர் தோற்கும் நிலை ஏற்பட்டது. எனவே இஸ்ரவேலர் பரிசுத்தமான பெட்டியை யுத்த களத்திற்கு, தேவன் அவர்களுக்காகப் போரிடுவார் என்ற நம்பிக்கையில் கொண்டு வந்தனர்.
- கூடாரத்தில் மகா பரிசுத்த ஸதலத்தில் பரிசுத்த பெட்டி வைக்கப்பட வேண்டும் என்று தேவன் கட்டளை இட்டிருந்தார். வருடத்திற்கு ஒரு முறை, பலியின் இரத்தத்தோடு, தலைமை ஆசாரியன் மட்டுமே அதை நெருங்க முடியும்.
- இஸ்ரவேலின் தேவன் போர்க்களத்தில் நுழைந்து விட்டார் என்று பெலிஸ்தர்கள் நம்பி பயந்தாலும் கடுமையாகப் போரிட்டு பெட்டியைப் பிடித்தனர்.
- இதைக் கேள்விப்பட்ட தலைமை ஆசாரியனான ஏலி அதிர்ச்சியுற்று பின்புறமாக விழுந்து இறந்தான்.
- பெலிஸ்தர்கள் பரிசுத்த பெட்டியைத் தங்கள் மீன் கடவுளான தாகோனின் சிலைக்கு அருகில் அவனது கோயிலில் வைத்தனர்.
- மூன்றாவது நாள், தாகோன் கீழே விழ அவனது மீன் தலை உடைந்தது. மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து பழைய பாம்பின் தலையை இயேசு நசுக்கியதை இதனோடு ஒப்பிடவும்.
- மூன்றாவது நாள் யோனாவை உயிரோடு கக்கிய மீனை தாகோன் நினைவு படுத்துகிறது.
- பெலிஸ்தருக்கு வேதனை தரும் பொக்களம் உண்டாகியதால், ஒட்டுபவன் இல்லாத ஒரு மாட்டு வண்டியில் வைத்து இஸ்ரவேல் தேசத்துக்கு அது கொண்டு போகிறதா என்று பார்த்தனர்.
- வயலில் வேலை செய்து கொண்டிருந்த சிலர், மின்னும் பொற் சிறகுகளைக் கொண்ட பரிசுத்தப் பெட்டி இஸ்ரவேலுக்கு வந்து கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தனர். இயேசு உயிர்த்தெழுந்து வந்தபோது சீஷர்கள் மகிழ்ச்சி அடைந்தது போலாகும் இந் நிகழ்ச்சி.

**மனன வசனம்** யோவான் 1:14.

ஜெபிக்கவும், செயல்பாடுகளைத் திட்டமிடவும் **இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை** உருவாக்கவும். இம்மானுவேலராகிய (தேவன் நம்மோடிருக்கிறார்) எழுந்த கிறிஸ்துவை, விசுவாசத்தினால் பார்க்க உதவுமாறு தேவனை வேண்டிக் கொள்ளவும். அவரோடு உறவை வளர்த்துக் கொள்ள உதவ வேண்டுவோம். ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்போம்.

யோவான் 1:1-3; 7 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** ஆசரிக்கவும்.

- இயேசுவே ஜீவனுள்ள தேவ வார்த்தை; அவர் மாம்சமானார்; காண முடியாத தேவனைப் பார்க்கக் கூடிய வடிவம் என்பதை விளக்கவும் (கொலோ. 1:15-17; யோவான் 1:14).
- இந்த அற்புத அவதாரத்தைக் கர்த்தரின் பந்தி பிரதிபலிக்கிறது. அப்பத்தை நாம் புசிக்கும் போது, இயேசு மனித வடிவாகப் பிறந்தார் என்பதை அது ஞாபகப்படுத்துகிறது. எல்லா மனிதர்களின் பாவத்தை மூடவும் இயேசு மானிட இரத்தத்தை சிந்தினார். இதற்கு மேலும் விளக்கம் காண 1 தீமோ. 2:6 & 7, 1 யோவான் 2:2 ஆகிய வேத பகுதிகளைப் பார்க்கவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net